**வேலூர் மாவட்டம்**

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**முன்னிலை : திரு. க. முனுசாமி, எம்.ஏ., எம்.எஸ்.சி., எம்.பி.ஏ., பி.எட்., எம்.பில்.,**

**ந.க.எண்.150/மாஒ6/ஒபக/2023, நாள்:03.02.2023.**

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் - 2022-2023-ஆம் கல்வியாண்டு – தற்காப்புக் கலைப் பயிற்சி பள்ளிகளுக்கு வழிகாட்டுதல் நெறிமுறைகள் வழங்குதல் – பயிற்சி பயிற்றுநர்களுக்கு செலவினம் மேற்கொள்ள ஏதுவாக தகவல் தெரிவித்தல் – சார்பு.

பார்வை: மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் சென்னை ந.க.எண்.5049/A16/SS/2022, நாள்:20.01.2023.

*******

2022-2023ம் கல்வி ஆண்டிற்கான ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வேலூர் மாவட்டம், பார்வையில் காணும் கடிதத்தின்படி மத்திய கல்வி அமைச்சக திட்ட ஏற்பளிப்புக் குழு ஒப்புதலின்படி, (Rani Laxmibai Atma Raksha Prashikshan' (Elementary and Secondary ) – Self – Defence Training) தலைப்பின் கீழ், 147 அரசு நடுநிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியர்களுக்கு தற்காப்புக் கலை பயிற்சியளிக்க மாதம் ஒன்றுக்கு ரூ.5000/- (பயிற்சியாளர்களுக்கான ஊதியம் + மாணவர்களுக்கான சிற்றுண்டி செலவினம்) பள்ளி வீதம் 3 மாதங்களுக்கு ரூ.15,000/- ஆக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் 117 உயர் / மேல் நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவியர்களுக்கு பயிற்சியளிக்க மாதம் ஒன்றுக்கு ரூ.5000/- (பயிற்சியாளர்களுக்கான ஊதியம் + மாணவர்களுக்கான சிற்றுண்டி செலவினம்) பள்ளி வீதம் 3 மாதங்களுக்கு ரூ.15000/- ஆக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பள்ளி மாணவிகள் எந்த ஒரு சூழலையும் பக்குவமாக எதிர்கொள்ளும் ஆற்றல் மற்றும் திறனை வளர்க்கும் வகையிலும், இடைநிற்றலை தவிர்த்து இடைநிலை மற்றும் மேல்நிலை கல்வியை தொடர்வதற்கு ஏற்ப Karate, Judo, Taekwondo, Silambam ஆகிய தற்காப்பு கலை பயிற்சிகள் மாணவிகளுக்கு தன்னம்பிக்கையை அளிக்கிறது. இப்பயிற்சி மாணவிகளுக்கு தன்னம்பிக்கை தருவதால், பாதுகாப்பிற்கு ஏற்புடையதாக அமைகின்றது.

2015-16 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரும் தற்காப்புக்கலை பயிற்சியானது, இக்கல்வி ஆண்டிலும் 2020-23 மாவட்ட உடற்கல்வி ஆய்வர்கள் உதவியோடு மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. வாரம் இரண்டு நாட்கள் மாலையில் ஒரு மணி நேரம் என்ற வீதத்தில் மூன்று மாதங்களுக்குப் பயிற்சியளிக்கத் திட்டமிட வேண்டும்.

தற்காப்பு கலை பயிற்சி பயிற்றுநர்களை தேர்ந்தெடுக்கும்போது கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள்:-

காரத்தே பயிற்றுநர்களுக்கான கல்வித் தகுதி

- குறைந்தபட்சம் 10 ஆம் வகுப்பு முடித்திருக்க வேண்டும்.
- தொழில்நுட்பக் கல்வித் தகுதிகள்
  - Karate / Judo / Taekwondo வில் சான்றிதழ் பயிற்சி (Certificate Course)
  - Karate / Judo / Taekwondo வில் பட்டயப்பயிற்சி (Diploma Course)
  - 1 ஆண்டு முதுநிலை பட்டயப் படிப்பு (P.G. in Diploma)
  - 'World Karate Federation' மூலமாக வழங்கப்படும் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
  - Don 4th degree in Karate (Black Belt) முடித்திருத்தல் வேண்டும்.
- கராத்தே பயிற்றுநர் சார்ந்து எவ்வித பணி நியமண ஆணையையும் முதன்மைக் கல்வி அலுவலரோ, இதர ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அலுவலர்களோ அல்லது பள்ளித் தலைமை ஆசிரியரோ வழங்கக்கூடாது.
- பயிற்றுநரின் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு தகுதியான பயிற்றுநர்கள் மட்டுமே பள்ளிகளில் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.
- ஒன்றியங்களில் பயிற்றுநர்கள் போதுமான அளவில் இருப்பின் தனித்தனி பயிற்றுநர்கள் நியமிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் ஒரே பயிற்றுநர் ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிகளில் பயிற்சியை நடத்தலாம்.
- பயிற்றுநர்களுக்கு எவ்வித பணி அனுபவச் சான்றிதழும் வழங்கக் கூடாது.

தற்காப்புக்கலை பயிற்சிகளை பள்ளி அளவில் செல்படுத்துவதற்கான நெறிமுறைகள்:

1. கராத்தே, ஜீடோ, டேக்வேண்டோ, சிலம்பம் பயிற்சிகளில் ஏதேனும் ஒரு பயிற்சியை வாரத்தில் ஏதேனும் இரண்டு நாட்களில் ஒவ்வொரு பள்ளியிலும் மூன்று மாதங்களுக்குக் கற்றுத் தருதல் வேண்டும்.
2. இப்பயிற்சியினை மார்ச் 2023ற்குள் முடிக்க வேண்டும்.
3. 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியர்களுக்கு (ஒரு பள்ளியில் அதிக பட்சம் 100 மாணவியர்களுக்கு மிகாமல் பள்ளி வளாகத்தில் கற்றுத் தரப்பட வேண்டும்.
4. எக்காரணத்தை முன்னிட்டும் ஒரு பள்ளியில் பயிலும் மாணவியர்களைப் பயிற்சிக்காக வேறு ஒரு பள்ளிக்கு அழைத்துச் செல்லுதல் கூடாது.
5. மாணவியர் விடுதியில் தங்கி பயிலும் மாணவியர்களுக்கு தற்பாப்பு கலை பயிற்சி அளிப்பதில் முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.
6. உடல் நலம் பாதிக்கப்பட்டவர்கள், சிறப்பு மாணவிகள் ஆகியோர் பயிற்சியிலிருந்து விலக்கு அளிக்கப்படலாம்.
7. மாணவிகள் அன்றாடம் பயன்படுத்தும் ஆடை மற்றும் பிற பொருட்களை (KEY CHAIN, DUPPATTA, STOLE, MUFFLERS, BAGS, PEN, PENCIL, NOTEBOOKS, ETC.)

கருவிகளாகக் கொண்டு ஆபத்து காலங்களில் தங்களை தற்காத்துக் கொள்ளும் பயிற்சிகளையும் அளிக்க வேண்டும்.

8. பெண் பயிற்றுநர்களுக்கு முன்னுரிமை அளிக்கலாம். பெண் பயிற்றுநர் இல்லாத நிலையில் ஆண் பயிற்றுநரை தேர்ந்தெடுக்கலாம். இந்நிலையில் பெண் ஆசிரியைகள் மேற்பார்வையில் இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.
9. பயிற்சியில் பங்கு பெறும் மாணவிகளுக்கு வருகை பதிவு செய்யப்பட வேண்டும்.
10. அந்தந்த தற்காப்புக் கலைக்குரிய முன்னேற்பாடுகளுடன் மட்டுமே பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும். பங்கு பெறும் மாணவிகளின் பாதுகாப்பிற்கு உரிய கவனம் செலுத்துதல் வேண்டும்.
11. சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்கள், பயிற்றுநர்கள் கலந்து பேசி நேர அட்டவணையை இறுதி செய்திட வேண்டும். பயிற்சிக்கான கால அட்டவணை இணைப்பில் வழங்கப்பட்டுள்ளது.
12. ஒவ்வொரு பள்ளியிலும் SMC தீர்மானம் மற்றும் Skill Map - இன்படி, பயிற்சிக்கு பயிற்றுநர் நியமிக்கப்பட்டு, பயிற்சியானது திட்டமிட்டபடி நடைபெறுதலை உறுதி செய்ய வேண்டும். SMC குழு உறுப்பினர்கள் மாதம் ஒரு முறையேனும் தற்காப்பு பயிற்சியை பார்வையிட வேண்டும். பயிற்றுநர்களிடமிருந்து பாடத்திட்டம் பெறப்படவேண்டும். மாணவியர்களின் திறனுக்கு ஏற்ப பயிற்சி வழங்கப்படவேண்டும். பயிற்சி நடைபெறுவதை சார்ந்த பள்ளியின் தலைமை ஆசிரியர் உதவி தலைமை ஆசிரியர் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டம் சார்ந்த அலுவலர்கள் மற்றும் SMC உறுப்பினர்கள் பார்வையிடுதல், வேண்டும். பயிற்சி நடைபெறும் காலங்களில் மாதாந்திர அறிக்கையினை தொகுத்து மாவட்ட திட்ட இயக்ககத்திற்கு அனுப்புதல் வேண்டும். மாதாந்திர அறிக்கை படிவம் இணைப்பு - 2ல் வழங்கப்பட்டுள்ளது.
13. இணைப்பு 4-ல் உள்ள பாடத்திட்டத்தின்படி Skill அடிப்படையில் திறன் பயிற்சி வழங்கப்பட வேண்டும். பயிற்சி நடைபெறுவதை தலைமையாசிரியர், உதவி தலைமையாசிரியர்கள் பார்வையிடுதல் வேண்டும்.
14. அனைத்து பள்ளிகளிலும் மாணவிகளுக்கு முறையாக பயிற்சி அளிக்கப்பட்ட முழு விவரத்தை DC, BRTEs மதிப்பீடு செய்ய வேண்டும்.
15. பள்ளிகளில் மேற்கொள்ளப்பட் நடவடிக்கைகள் குறித்த புகைப்படங்களுடன் கூடிய தொகுப்பறிக்கையை ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் (BRTE) வாயிலாகவும் ஒரு செயல் விளக்கத்தை பயிற்சி பெற்ற மாணவிகள் மூலமாகவும் செய்து அதன் காணொலி (Video) பதிவை ஆங்கில துணைத் தலைப்புகளோடு (English Sub - title) தயாரித்து பள்ளி அளவில் முறையாக பராமரிக்கவும், சிறந்த தயாரிப்பை மாவட்ட திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும் அறிவுத்தப்படுகிறது.
16. மாவட்டத் திட்ட அலுவலகத்தில் அனைத்து பள்ளிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட பயிற்றுநர் விவரம், பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்றுநர் ஊதியம் மற்றும் தற்காப்புக்கலை

பயிற்சிக்கான தொகுப்பறிக்கை (Documentation) ஆகியவற்றிற்கு முறையா[illegible] பதிவேடுகள் பராமரிக்கப்படுதல் வேண்டும்.

மேற்குறித் பயிற்சியினை அரசு தொடக்க மற்றும் உயர்நிலை / மேலநிலை பள்ளிகளில் சிறப்பான முறையில் தற்காப்பு பயிற்சி நிபுணர்களைக் கொண்டு குறிப்பிட்ட மாதங்களில் பயிற்சியினை மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிர்யர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

03/02/23

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர், (பொ)

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,

வேலூர் மாவட்டம்.

03/02/2023.

பெறுநர்:

1. சார்ந்த அரசு நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியாகள்.
2. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
3. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.

நகல்:

1. முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக்கல்வி), வேலூர் மாவட்டம்.
3. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர், வேலூர் மாவட்டம்.